# இயேசு சிலுவையில் மரிக்கவேண்டியிருந்தது ஏன்?

*இயேசுவின் மரணத்தினுடைய நோக்கம் நமது படிப்புகளில் சுருக்கமாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்தத் தலைப்பைக் கூறிமுடிப்பதற்கு நூறு தொகுதிகளும்கூடப் போதாது; கேட்கப்படும் ஒவ்வொரு கேள்விக்கும் பதில் அளிக்க ஆயிரக்கணக்கான தொகுதிகளாலும் கூட முடியாது. இருப்பினும் ஒரு சில கூடுதலான குறிப்புகள் இந்தக் கணத்திற்குப் போதுமானதாக இருக்கும்.*[1]

*"எல்லாரும் பாவம் செய்து[ள்ளோம்]" (ரோமர் 3:23) மற்றும் "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23). பாவிகள் ஆவிக்குரிய மரணத்தினால் - அதாவது தேவனை விட்டுப் பிரிதலினால் - இவ்வாழ்வில் துன்புறுகின்றனர் (எபே. 2:1, 12). மற்றும், அவர்கள் "இரண்டாம் மரணத்தை எதிர்கொள்ளுகின்றனர்," இது இனிவரும் வாழ்வில் தேவனை விட்டு நித்தியத்திற்கும் பிரிதலாக உள்ளது (வெளி. 20:14; 21:8).*

*பாவம் என்பது பரிசுத்தமான தேவனுக்கு ஒரு அவமானமாக உள்ளது (ரோமர் 3:23ஆ; ஏசா. 5:16; எபி. 10:29ஐக் காணவும்). செய்துள்ள எந்த ஒரு பாவத்தின் குற்றத்தையும், நற்செயல்கள் எதைக்கொண்டும் அழித்துப் போட இயலாது; நாம் நமது கிரியைகளினால் இரட்சிக்கப்பட இயலாது (எபே. 2:8, 9ஐக் காணவும்) நம்மாலான மட்டும் நல்லவைகளைச் செய்தாலும் கூட, அது போதுமானதாய் இருப்பதில்லை (ஏசா. 64:6; ரோமர் 3:12). நீதியின் தேவன் என்ற வகையில் (ஏசா. 30:18), கர்த்தர் பாவத்திற்காக [நம்மை] தண்டியாமல் விட இயலாது (ரோமர் 1:18ஐக் காணவும்). நாம் யாவரும் பாவத்தின் குற்றத்தை நீக்கத் திறனற்றவர்களாக விடப்பட்ட [மற்றும் விடப்படுகின்ற]படியால், மனித குலத்தின் நெருக்கடியான நிலையானது பரிதபிக்கத்தக்க குரல் எழுப்புவதாகக் காணப்படுகிறது.*

*தேவன் நீதியின் தேவனாக மாத்திரம் இன்றி அன்பின் தேவனாகவும் (1 யோவா. 4:8) இருப்பதற்காகக் கர்த்தருக்கு நன்றி! அவர் அன்பான தேவன் என்ற வகையில், ஒருவரும் கெட்டுப்போகக்கூடாது என்று விரும்பினார் (மற்றும் விரும்புகின்றார்) (2 பேது. 3:9ஐக் காணவும்). தேவனுடைய இந்த இரண்டு பண்புகளும் ஒரு இக்கட்டான நிலையை முன்னிறுத்திற்று. அவர், நியாயமுள்ளவராயிருந்து பாவத்தை தண்டிக்கவும் அதே வேளையில் பாவிகளை நீதிமான்களாக்குகின்றவராக இருக்கவும் முடிவது எப்படி (ரோமர் 3:26ஐக் காணவும்)? இந்த இக்கட்டான நிலைக்கு, "நானே அதற்கு*

விலைசெலுத்துவேன்; மனிதகுலத்தின் பாவங்களுக்கான தண்டனையை அனுபவிக்கும்படி எனது குமாரனை அனுப்புவேன்" என்பதே தேவனுடைய பதிலாக இருந்தது (யோவா. 3:16ஐக் காணவும்). 1 யோவான் 4:10ல் நாம், "அவர் ... நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பி[னார்]" என்று வாசிக்கின்றோம். "கிருபாதார பலி" என்ற வார்த்தையானது "தேவனுடைய நீதியினிடத்தில் [பாவங்களுக்காக] நிவிர்த்தி செய்தல், அவருடைய நீதியை சாந்தப் படுத்துதல் அல்லது திருப்திப்படுத்துதல்" என்று அர்த்தப்படுகிறது.

கிருபாதார பலியாகும் பாடுகள் மேற்கொள்ள வேண்டிய வடிவம் என்ன? முன்னதாக, மனிதகுலத்துடன் தேவனுடைய செயல்பாட்டில், பலியின் கொள்கை - இன்னொருவருக்காக ஒரு உயிர் கொடுக்கப்பட வேண்டும் என்ற கொள்கை - ஏற்படுத்தப்பட்டிருந்தது (ஆதி. 4:4; 8:20; 31:54; 12:7ஐக் காணவும்). இந்தச் செறிவான கருத்து நிலைநாட்டப்பட்டது: "... இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது" (எபி. 9:22). தேவனுடைய அறிவுறுத்துதலின்படி ஆண்டுகளினூடே, பல்லாயிரக்கணக்கான மிருக பலிகள் செலுத்தப்பட்டன. "காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்ய மாட்டாதே" (எபி. 10:4) என்பதே பிரச்சனையாக இருந்தது. ஒரே ஒரு பலி மாத்திரமே அதைச் செய்யக்கூடும்: அதாவது, பூரணத்துவம் வாய்ந்த தேவகுமாரன் (1 பேது. 1:18, 19ஐக் காணவும்) பலியாக வேண்டும். அவரது இரத்தம் மட்டுமே நம்மை "தேவ கோபாக்கினை"யில் இருந்து இரட்சிக்க முடியும் (ரோமர் 5:9). ''பாவமன்னிப்பை'' சாத்தியமாக்குவதற்கு கிறிஸ்துவினுடைய விலைமதிப்பற்ற இரத்தம் "சிந்தப்பட வேண்டியதாயிற்று" (மத். 26:28).

சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தம் மேற்கொள்ள வேண்டிய சாயல் என்ன? தேவனுடைய நித்திய நோக்கத்தில் (எபே. 3:11), சிலுவையில் அறையப்பட்டு மரணமடைதல் என்பது முன்தீர்மானமானதாக இருந்தது. பாடுபடவிருந்த ஊழியரின் கைகளும் கால்களும் "உருவக் குத்தப்படும்" என்று சங்கீதக்காரர் கூறினார் (சங். 22:16). கிறிஸ்துவே கூட, தாம் சிலுவையில் அறையப்படவிருந்ததை முன்னுரைத்தார் (மத். 20:17-19; லூக். 24:6-8ஐக் காணவும்) - இது, அவரது கைகளையும் கால்களையும் ஊடுருவுவதை உள்ளடக்கும்.[2] ரோமச் சிலுவையில் இயேசு மரித்தபோது, ஊடுருவப்பட்ட அவரது கரங்கள் மற்றும் பாதங்களில் இருந்தும், கிழிக்கப்பட்ட முன்நெற்றி மற்றும் சிதைக்கப்பட்ட முதுகு ஆகியவற்றில் இருந்து இரத்தம் ஊற்றியது. அவரது மரணத்திற்குப் பின்பு, அவரது விலாவிலிருந்து இரத்தம் வடிந்தது (யோவா. 19:34). வேதாகமத்தின்படி, நாம் அந்த இரத்தத்தின்மூலம் நீதிமான்களாக்கப்பட்டு, தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டு, தெய்வீக கோபத்திலிருந்து காக்கப்படுகின்றோம் (ரோமர் 5:9, 10).

இயேசுவின் இரத்தம் நமது இரட்சிப்பை எவ்வாறு சாத்தியமாக்குகிறது என்பதை நாம் மிகச் சரியாகப் புரிந்துகொள்ள முடியுமா? இல்லை - ஆனால் நாம் பின்வருவதைப் புரிந்துகொள்ள முடியும்: அவரது இரத்தம் தேவனுடைய நீதியைத் திருப்தி செய்தது (ரோமர் 3:25; எபி. 2:17; 1 யோவா. 2:2).

*ஆகையால், அவரது அன்பிற்குப் பதில் செய்ய மனவிருப்பமுமுள்ள (யோவா. 14:15; 1 யோவா. 4:19), இரட்சிப்புக்கான அவரது நிபந்தனை களை ஏற்றுக்கொள்ளுகின்ற (மாற். 16:15, 16; அப். 2:37, 38) எவரும் இரட்சிக்கப்பட முடியும்! தேவன் நமக்குச் செய்துள்ளவற்றை நாம் முற்றிலுமாகப் புரிந்துகொள்ள இயலாது, ஆனால் அவர் செய்துள்ளவற்றிற்காக நாம் அவரைத் துதிக்கின்றோம். "தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்" (2 கொரி. 9:15).*

---

குறிப்புகள்

[1]*இன்னும் அதிகம் முழுமையான கலந்துரையாடல் ஒன்று* "The Center of God's Love" in David Roper, *Jesus Christ and Him Crucified* (Arvada, Colo.: Christian Communications, 1976) *என்ற பாடத்தில் தரப்பட்டுள்ளது.* [2]*மேசியாவை "ஊடுருவும்" வேறுபட்ட வகையொன்று சகரியா 12:10ல் சித்தரிக்கப்பட்டிருந்தது (யோவா. 19:34, 37ஐக் காணவும்).*